# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:266/பேரூ/2025**
**நாள் : 11.05..2026**

R. மார்க்கண்டசாமி,
தென்கரை,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், பெரியகுளம், தென்கரை. 1-4-65A கம்பம் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில், RMS நிக்கல் பாலிசிங் ஒர்க் என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மார்க்கண்டசாமி என்பவரது 23.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.07.2025 அன்று பெறப்பட்டு, 266/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், பெரியகுளம், தென்கரை. 1-4-65A கம்பம் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில் , RMS நிக்கல் பாலிசிங் ஒர்க் என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மார்க்கண்டசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 23.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"எனக்கு சொந்தமான மேற்கண்ட தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் தென்கரை பேரூராட்சியில் கதவு எண். 65A, வார்டு எண். 4, தெரு எண். 6, கம்பம் சாலை, பெரியகுளம் என்ற முகவரியில் 1188 சதுர அடி உள்ள இடத்தில் கட்டுமான அளவு 950 சதுரடியில் கட்டிடம் கட்டி சிறிய Electro Plating தொழில் செய்யும் கூடத்தை சொந்தமாக வைத்து நடத்தி வருகிறேன். மேற்கண்ட இடமானது பெரியகுளம் 2 நீர் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 4316 நாள் : 20.02.2022ன்படி கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி இடம் பெரியகுளம் வட்டம் தென்கரை கிராமம் புல எண். 110/1ஏல் கட்டப்பட்டதாகும்.

இதற்கான சொத்து வரியாக 2024-2025 அக்டோபர் - மார்ச் அரையாண்டிற்கு ரூ.5,456/- (ரூபாய் ஐந்தாயிரத்து நானூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) நிர்ணயம் செய்து Demand Notice வரப்பெற்றுள்ளது. ஓராண்டுக்கு ரூ.10,912 (ரூபாய் பத்தாயிரத்து தொள்ளாயிரத்து பன்னிரெண்டு)

நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகளுக்கான இணைய தளத்தில் சரிபார்த்ததில் என்னுடைய கட்டிட சதுரடி அளவை தவறாகக் குறிப்பிட்டு வரி கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

இது தொடர்பாக மறு ஆய்வு செய்து சொத்து வரியைக் குறைத்து நிர்ணயம் செய்து தரக்கோரி பெரியகுளம் தென்கரை பேரூராட்சியின் செயல் அலுவலரை தொடர்பு கொண்ட போது மறு ஆய்வு செய்ய மறுத்துவிட்டார்.

எனவே, எனக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சொத்து வரி கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், அதனை மறு ஆய்வு செய்து சொத்து வரியை நிர்ணயம் செய்து எனக்கு நீதி வழங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் சொத்து பத்திர நகல், சொத்துவரி, இரசீது நகல், இணைய வழி காட்டுதல் மூலம் எடுக்கப்பட்ட விபர நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.02.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 114/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தேனி மாவட்டம், தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி சர்வே எண். 110/1ஏ வார்டு 1 கம்பம் ரோட்டில் திரு. ரா. மார்க்கண்டசாமி என்பவர் தனக்கு சொந்தமான 1188 சதுரடி இடத்தில் 897 சதுரடி பரப்பளவில் வணிக பயன்பாட்டிற்கு ஆர்.எம்.எஸ் பாலிசிங் & பிளான்டிங் ஒர்க்ஸ் என்ற பெயரில் பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதி எண். 03/2002-2003 நாள் 15.05.2002ன்படி அனுமதி பெற்று அதன் அடிப்படையில் 2002-2003ஆம் ஆண்டு ஓராண்டிற்கு சொத்துவரி விதிப்பு எண். 2906, கதவு எண். 65Aல் உள்ள வணிகக் கட்டிடத்திற்கு ரூ.2942-/ஆக நிர்ணயம் செய்து சொத்துவரி செலுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விதிகளின்படியும், அரசு ஆணைகளின்படியும், இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படியும் இப்பேரூராட்சியில் 2008-2009ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின் போது வணிகப் பயன்பாட்டிற்கு 50% கூடுதலாக நிர்ணயம் செய்து வசூலிக்க அரசாணையின்படி இப்பேரூராட்சி மன்ற அனுமதியின்படியும் மேற்படி கதவு எண். 65Aல் உள்ள வணிகக் கட்டிடத்திற்கு ரூ.5882/- ஆக சொத்து வரி செலுத்தி வந்துள்ளார். மேலும் இப்பேரூராட்சியில் 2018-2019ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின்போது வணிகப் பயன்பாட்டிற்கு 50% கூடுதலாக நிர்ணயம் செய்து வசூலிக்க அரசாணையின்படி ரூ.8.824/- ஆக சொத்துவரி செலுத்தி வந்துள்ளார்.

மேலும், இப்பேரூராட்சி 2022-2023ஆம் ஆண்டு சொத்துவரி மறுசீராய்வு மற்றும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படியும், வணிக பயன்பாட்டிற்கு 100% கூடுதலாக வசூலிக்க அரசு ஆணையின்படி ரூ.10,296-/ ஆக சொத்துவரி செலுத்தி வருகிறார். எனவே மேற்படி கதவு எண். 65Aல் உள்ள வணிகக் கட்டிடத்திற்கு 2002-2003ஆம் ஆண்டு 897 சதுரடி உள்ள பரப்பளவிற்கு இப்பேரூராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி ஆகும். கூடுதலாக வரப்பெற்ற தொகை அனைத்தும் சொத்துவரி சீராய்வின் போது அரசு ஆணையின்படியும், உயர்ந்துள்ள வரி தொகை ஆகும். இதை தவிர்த்து கூடுதலாக வரி ஏதும் வசூலிக்கப்படவில்லை. அதற்கான பத்திர நகல், வரைபட அனுமதி நகல் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 24.02.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. R. மார்க்கண்டசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தேனி மாவட்டம், தென்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 110/1A-ல், கதவு எண். 65-A, 6, கம்பம் சாலை, பெரியகுளம் என்ற முகவரியில் அமைந்துள்ள 897 சதுரடி பரப்பளவு கொண்ட எனது வணிக பயன்பாட்டிலுள்ள (சிமெண்ட் ஷீட்) 2024-25ஆம் ஆண்டு அரையாண்டு (அக்டோபர் முதல் மார்ச்) சொத்துவரியாக ரூ.5,456 (ஓராண்டிற்கு ரூ.10,912) என பேரூராட்சியால் நிர்ணயம் செய்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- ஆனால் சொத்துவரி நிர்ணயம் செய்ததை குறித்து பேரூராட்சியின் இணைய தளத்தில் சரி பார்க்கப்பட்டதில், என்னுடைய சிமெண்ட் சீட் கொண்ட கட்டட சதுரடி அளவை தவறாக குறிப்பிட்டு கூடுதல் சொத்துவரி நிர்ணயம் செய்துள்ளனர். இந்த தவறை நான் சுட்டி காட்டியதற்கு மறுமுறை திருத்திக்கொள்ளலாம் என்று பதில் கூறுகின்றனர்.

- இது தொடர்பாக எனது வணிக கட்டட பரப்பளவை மறு ஆய்வு செய்து, சொத்துவரியை குறைவாக நிர்ணயம் செய்யக் கோரியதில், தென்கரை பேரூராட்சி செயல் அலுவலர் மறுப்பு தெரிவித்துள்ளார். சிமெண்ட் சீட் கொண்ட கட்டடத்திற்கு சதுரடிக்கு ரூ.0.50 வசூலிக்க வேண்டுமென்று அரசு நிர்ணயம் செய்துள்ளது.

- மேலும் இது தொடர்பான சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளேன் என்று இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

- எனவே எனது சிமெண்ட் சீட் கட்டடம் கொண்ட 897 சதுரடிக்கு மொத்த வரி தமிழ்நாடு உள்ளாட்சி முறைப்படி ரூ.449 மட்டுமே வசூல் செய்திருக்க வேண்டும். ஆனால் தென்கரை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு விதிகளுக்கு அப்பாற்பட்டு அதிக வரி விதிப்பு செய்துள்ளார். ஆகவே சட்டத்திற்கு புறம்பாக அதிக வரி விதிப்பு செய்த மேற்கண்ட செயல் அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்து எனது வணிக கட்டடத்தை மறு ஆய்வு செய்து, சொத்துவரியை குறைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித காரணமும் தெரிவிக்காமல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

7. எனினும் எதிர்மனுதாரரான தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் 09.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. எதிர்மனுதாரரான தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 09.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தென்கரை தேர்வுநிலை பேரூராட்சியால் கட்டட வரைபட அனுமதி பெற்ற மனுதாரர் R. மார்க்கண்டசாமி என்பவருக்கு சொந்தமான கதவு எண். 65A, கம்பம் சாலை, பெரியகுளம் என்ற முகவரியிலுள்ள 897 சதுரடி பரப்பளவு கொண்ட வணிக பயன்பாட்டிலுள்ள சிமெண்ட் ஒடு (ஆஸ்பெட்டாஸ்) கட்டடத்திற்கு 2002-2003ஆம் அரையாண்டிற்கு சொத்துவரி மட்டும் ரூ.1,337 நிர்ணயம் செய்யப்பட்டது.
- 2008-2009ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின்படி, கூடுதலாக 100% உயர்வு செய்து அரையாண்டிற்கு ரூ.2,674 மனுதாரரிடம் வசூலிக்கப்பட்டு வந்தது.
- இந்நிலையில் மேலும் 2022-23ஆம் ஆண்டு சொத்துவரி மறுசீராய்வின்படி, 897 சதுரடி பரப்பளவு கொண்ட மனுதாரரின் தொழிற்சாலை கட்டடத்திற்கு 75% உயர்வு செய்து அரையாண்டிற்கு ரூ.4,680 என கணக்கிடப்பட்டு, மனுதாரர் சொத்துவரியை செலுத்தி வருகிறார்.
- மேலும், 2023-24ஆம் ஆண்டிற்கு 15வது நிதிக்குழு ஆணைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023, விதி எண். 264 (2)ன்படி 6% உயர்வு செய்து அரையாண்டிற்கு சொத்துவரி ரூ.4,961 உயர்வு செய்யப்பட்டு மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.
- மேற்கண்ட விபரப்படி ஆண்டிற்கு சொத்து வரியாக ரூ.9,922 நூலக வரியாக ரூ.992 மொத்தம் ரூ.10,914 என 2023-24ஆம் ஆண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- எனவே 2002-03ஆம் ஆண்டில் 897 சதுரடி கொண்ட சிமெண்ட் ஒடு (ஆஸ்பெட்டாஸ்) தொழிற்கூட பயன்பாட்டிலுள்ள கட்டடத்திற்கு வரி நிர்ணயம் செய்து அதன் அடிப்படையிலேயே 2008-09, 2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டிற்கு சொத்துவரியை மறுசீராய்வு செய்து சொத்துவரி அரசு விதிகளின்படி உயர்த்தப்பட்டுள்ளது. எனவே எவ்வித கூடுதல் சொத்துவரியும் நிர்ணயம் செய்யவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. எதிர்மனுதாரரான தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 09.04.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே தனது 08.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 114/2025-ல் தனது கூடுதல் விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் –

தேனி மாவட்டம், தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி சர்வே எண். 110/1ஏ வார்டு 1 கம்பம் ரோட்டில் திரு. ரா. மார்க்கண்டசாமி என்பவர் தனக்கு சொந்தமான 1188 சதுரடி இடத்தில் 897 சதுரடி பரப்பளவில் வணிக பயன்பாட்டிற்கு ஆர்.எம்.எஸ் பாலிசிங் & பிளான்டிங் ஒர்க்ஸ் என்ற பெயரில் பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதி எண். 03/2002-2003 நாள் 15.05.2002ன்படி அனுமதி பெற்று அதன் அடிப்படையில் 2002-2003ஆம் ஆண்டு ஓராண்டிற்கு சொத்துவரி விதிப்பு எண். 2906, கதவு எண். 65Aல் உள்ள வணிகக் கட்டிடத்திற்கு ரூ.2,942-/ஆக நிர்ணயம் செய்து சொத்துவரி செலுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விதிகளின்படியும், அரசு ஆணைகளின்படியும், இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படியும் இப்பேரூராட்சியில் 2008-2009ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின் போது வணிகப் பயன்பாட்டிற்கு 100% கூடுதலாக நிர்ணயம் செய்து வசூலிக்க அரசாணையின்படியும், மேலும் இப்பேரூராட்சி 2022-2023ஆம் ஆண்டு சொத்துவரி மறுசீராய்வு மற்றும் இபபேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படியும், தொழிற்கூடம் பயன்பாட்டிற்கு 75% கூடுதலாக வசூலிக்க அரசாணையின்படியும், 2023-2024ஆம் ஆண்டிற்கான சொத்துவரி 6% உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்கண்ட விவரப்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | 2002-2003ஆம் ஆண்டு புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் (ரூபாய்) | | | | 2008-2009ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின் போது வணிக பயன்பாட்டிற்கு 100% கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் (ரூபாய்) | | | 2022-2023ஆம் ஆண்டு சொத்துவரி மறுசீராய்வு போது தொழிற்கூடம் பயன்பாட்டிற்கு 75% கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் (ரூபாய்) | | | 2023-2024ஆம் ஆண்டு சொத்துவரி 6% கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் (ரூபாய்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | P | L | T | P | L | T | P | L | T | P | L | T |
| | முதல் அரையாண்டு | 1337 | 134 | 1471 | 2674 | 267 | 2941 | 4680 | 468 | 5148 | 4961 | 496 | 5457 |
| | இரண்டாம் அரையாண்டு | 1337 | 134 | 1471 | 2674 | 267 | 2941 | 4680 | 468 | 5148 | 4961 | 496 | 5457 |
| | மொத்தம் | 2674 | 268 | 2942 | 5348 | 534 | 5882 | 9360 | 936 | 10296 | 9922 | 992 | 10914 |

எனவே மேற்படி கதவு எண்.65Aல் உள்ள தொழிற்கூட கட்டடத்திற்கு 2002-2003ஆம் ஆண்டு 897 சதுரடி உள்ள பரப்பளவிற்கு (தகரம் மேற்கூரை அமைப்பு) இப்பேரூராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி ஆகும். கூடுதலாக வரப்பெற்ற தொகை அனைத்தும் சொத்துவரி சீராய்வின் போது அரசு ஆணையின்படியும், உயர்ந்துள்ள வரி தொகை ஆகும். இதை தவிர்த்து கூடுதலாக வரி ஏதும் வசூலிக்கப்படவில்லை. வரைபட அனுமதி நகல் மற்றும் 2002-2003ஆம் ஆண்டிற்கான சொத்துவரி கணக்கீட்டு படிவம் நகல் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. R. மார்க்கண்டசாமி என்பவர் தனது 23.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், தென்கரை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, தெரு எண்.6, கதவு எண். 65–A, கம்பம் சாலையில் அமைந்துள்ள மனுதாரருக்கு சொந்தமான 950 சதுர அடி பரப்பளவு கொண்ட வணிக கட்டடத்திற்கு 2024–25ஆம் ஆண்டிற்கு 6 மாத சொத்து வரி ரூ.5,456 என தென்கரை பேரூராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து இணையதளத்தில் சரிபார்க்கப்பட்டதில் கட்டடத்தின் பரப்பளவு கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. (1800 சதுர அடி என்பது மனு மற்றும் ஆவணம் மூலமாக அறிய வருகிறது.) எனவே கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சொத்து வரியை மறு ஆய்வு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரருக்கு சொந்தமான 897 சதுரடி பரப்பளவு கொண்ட வணிக பயன்பாட்டிலுள்ள சிமெண்ட் ஓடு (ஆஸ்பெட்டாஸ்) கட்டடத்திற்கு 2002-2003ஆம் அரையாண்டிற்கு சொத்துவரி மட்டும் ரூ.1,337 என நிர்ணயம் செய்யப்பட்டு, பின்னர் அரசாணை (நிலை) எண். 110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.06.2008ல் வெளியிடப்பட்ட சொத்துவரி சீராய்வின்படி கூடுதலாக 100% உயர்வு செய்து அரையாண்டிற்கு ரூ.2,674 என நிர்ணயம் செய்து மனுதாரரால் செலுத்தப்பட்டு வந்த நிலையில், அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.2022ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி சொத்துவரி மறுசீராய்வின்படி மனுதாரரின் தொழிற்சாலை கட்டடத்திற்கு 1.75 காரணியில் அதாவது 75%

உயர்வு செய்யப்பட்டு அரையாண்டிற்கு சொத்துவரி ரூ.4,680 என உயர்த்தப்பட்ட நிலையில், இதனைத் தொடர்ந்து 15வது நிதிக்குழு ஆணைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி எண். 264 (2)ன்படி 6% உயர்வு செய்திட பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க. எண். 13124/2024-2/இ5 நாள் 13.09.2024ல் வெளியிடப்பட்ட அறிவுறுத்தலின்படி, 6% உயர்வு செய்து அரையாண்டிற்கு சொத்துவரி ரூ.4,961 என உயர்த்தப்பட்டு, இவ்வாறு மனுதாரரின் 897 சதுரடி பரப்பளவில் உள்ள தொழிற்சாலை கட்டடத்திற்கு ஒரு வருடத்திற்கு சொத்துவரி ரூ,9,922 மற்றும் நூலக வரி ரூ.992 என ஆக மொத்தம் ரூ.10,994 தொகையானது 2023-2024ஆம் ஆண்டு முதல் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட ஆணைகளின்படி உயர்த்தப்பட்டுள்ளது எனவும் இதில் எவ்வித விதிமீறலும் நடைபெறவில்லை என தெரிவித்திருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு மே திங்கள் 11 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்

1) திரு. R. மார்க்கண்டசாமி,
RMS நிக்கல் பாலிசிங் ஒர்க்,
ஐயப்பன் கோவில் அருகில்,
1-4-65A கம்பம் ரோடு, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம்.
2) செயல் அலுவலர்,
தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்